Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# சங்கக்கால வீட்டமைப்பும் குறிஞ்சித் திணை குடியிருப்பும்

**முனைவர் அ.அசோகன்**
**தமிழ் விரிவுரையாளர்**
**அண்ணா பல்கலைக்கழகப் பொறியியல் கல்லூரி, அரியலூர்.**



**ஆய்வு நோக்கம்:**

ஒரு சமூகத்தின் வரலாறு என்பது அச்சமூகத்தின் மக்கள் வாழ்வியல், நிர்வாகம் முதலியவற்றோடு அச்சமூகத்தின் தொழில் மற்றும் கலை சார்ந்த வரலாறாகவும் அமைகின்றது எனலாம். இத்தகைய தொழில் மற்றும் கலைகளின் வளர்ச்சியும் மலர்ச்சியும் திடீரென எழுவதில்லை.மாறாக காலங்காலமாக எழுந்த அனுபவத்தின் படிவுகளால் விளைகின்றன. அந்த வகையில் பழந்தமிழ்ச் சமூக வரலாறு என்பது பழந்தமிழரின் தொழில் அறிவையும் கலைநுட்பத்தையும் அறிவது ஆகிறது. அம்முயற்சியின் விளைவாக சங்க இலக்கியத்தில் வீடு அமைப்புகளும் குடியிருப்புகளும் எடுத்துக் கொள்வது இக்கட்டுரையின் ஆய்வு நோக்கமாகும்.

**ஆய்வுச் சுருக்கம்:**

சங்கக் கால மக்களின் வாழ்வியல் வரலாற்றின் தங்களுடைய வீட்டமைப்புகளும் குடியிருப்புகளும் ஒவ்வொரு காலக்கட்டங்களாக தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அவை மலைகளிலும் காடுகளிலும் வசித்த மானுட சமுதாயம் விலங்குகளிடமிருந்தும் இயற்கைப் பேரிடர்களிலிருந்தும் தங்களைக் காத்துக் கொள்ள முற்பட்டது.அவ்வேளையில் ஏற்பட்டவையே வாழிடங்களாகும். செயற்கையாக மனிதர்கள் உருவாக்கிக் கொண்ட வாழிடங்கள் அந்தந்தப் பகுதியின் தன்மைக்கு ஏற்ப அமைந்தன. அந்த வகையில் பழந்தமிழர் தாம் இருந்த சூழலுக்கேற்ப வாழிடங்களை ஏற்படுத்திக் கொண்டமையைச் சங்க இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன.தாம் வாழும் இடத்திற்கேற்ப நிலத்தை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பகுத்த தமிழர் அவ்வப்பகுதியில் கிடைக்கும் மூலப்பொருள்களைக் கொண்டே தமது வாழிடங்களை அமைத்துக் கொண்டமையை சங்க இலக்கியம் நமக்குக் காட்டுகிறது. எனவே சங்கக்கால வீட்டமைப்பும் குறிஞ்சித் திணை குடியிருப்பும் எடுத்துக் கொள்வது இவ்வாய்வின் முதன்மை நோக்கமாகும்.

**கலைச்சொற்கள்:**

சுடுமண் - சுட்டமண், செங்கல்
இட்டிகை – செங்கல்
கவைத்துற்ற – பிரிவுத்தோன்ற
குரம்பை – சிறுகுடில்
பா – பரவிய
பெரிய – கருவை
ஓவம் - ஓவியம்

வெருவு – அச்சம்

விதிர்ப்பு – நடுக்கம்

**முன்னுரை:**

மனிதன் முதலில் உணவைத் தேடி அலைந்து உணவைப் பெறுகிறான். பின்னர் உடையை உடுத்துகிறான். நாடோடியாகத் திரிந்து, அலைந்த பின்னர் ஒரே இடத்தில் வாழத் தொடங்குகின்றான். மனிதன் முதலில் குகைகள் போன்றவற்றில் வசிக்க ஆரம்பித்து அவற்றின் தோற்றத்தைக் கொண்டு, அதைப்போலவே குடிசைகள் அமைக்க ஆரம்பிக்கிறான். இவ்வாறே முதலில் மனிதன் உறைகின்ற இடம் அமைகிறது. பல்வேறு விதமான குடிசைகளை இருப்பிடங்களுக்கு ஏற்றவாறு அமைத்த மனிதன், அவற்றில் பல வேறுபாடுகளைச் செய்கிறான் என்பதை கட்டுரையில் காண்போம்.

**சங்க கால வீட்டமைப்பு:**

சங்க காலத்தில் தனிப்பட்டோர் வீடு கட்டும் பொழுது கட்டட விதிமுறைகளையெல்லாம் பின்பற்றிச் செயல்பட்டார்களா என்று ஐயுறலாம். ஆனால் பண்டைக் காலத்திருந்தே மயமதம் என்னும் சிற்ப நூல் வழக்கிலிருந்துள்ளது. தென்னாட்டில் மயன் கொள்கையும் வடநாட்டில் விசுவகர்மாவின் கொள்கையும் வழக்கிலிருந்து வந்துள்ளமைக்குக் குறிப்புகள் உள்ளன. சிலப்பதிகாரம் இந்திர விழவு ஊரெடுத்த காதையில்,

நுண்வினைக் கம்மியர் காணா மரபின்

துயர்நீங்கு சிறப்பினவர் தொல்லோ ருதவிக்கு

மயன் விதித்துக் கொடுத்த மரபின இவை தாம் (106–108)

எனவரும் அடிகளை ஓர் எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். இனி, வீடுகட்டும் பொழுது பின்பற்றக் கூடிய சில விதிமுறைகளைக் காண்போம்.

சிறு வீடாயினும் பெரிய மாளிகையாயினும் கட்டடக் கலை அடிப்படையில் வீடு கட்டும் மனையிடத்தை வரையறை செய்து கொள்ள வேண்டும். அடுத்து, வீடு பறித்தல் (அடிப்படை – அத்திவாரம் - அமைக்கப் பள்ளம் தோண்டுதல்), கல்லும் சுண்ணாம்பும் கலந்து அழுத்தமாக அடிப்படை போடுதல், சுவர் அமைத்தல், முதல் வாயில்(முகப்பு நிலை) வைத்தல்,காலதர்(ஜன்னல்) அமைத்தல், விட்டம,; அமைத்தல், மேற்கூரையைத் தேர்ந்து அமைத்தல், தளவரிசை அமைத்தல், சுவர்களுக்குச் சுண்ணாம்புக் கலவை பூசுதல், வெள்ளையடித்தல், தச்சுக் கழித்தல்(கண்ணேறு படாதிருக்க ஆவன செய்தல்), புதுமனை புகுதல் முதலிய பலவும்கட்டடக் கலையுடன் தொடர்பு கொண்டவையாகும். இவற்றையெல்லாம் முன்னோர்கள் அனுபவ மரபுச் செல்வமாக (ர்நசவையபந டில நஒpநசநைnஉந) ஏற்றுச் செயற்படுத்தி வந்துள்ளனர்.

மண் சுவர்க் குடிசையில் வாழ்ந்தவன் நாகரிகப்படி நிலையில் செங்கற்களை அடுக்கிச் சுவரமைத்து வீடு கட்டியுள்ளான் என்பதை,

சுடுமண் ஓங்கிய நெடுநகர் வரைப்பின் (பெரும்பாணாற்றுப்படை.405)

(சுடுமண் - சுட்டமண், செங்கல்)

இட்டிகை நெடுஞ்சுவர் (அகநானூறு.167:13)

(இட்டிகை – செங்கல்)

எனவரும் செய்யுட் பகுதியாலும், தூண் வைத்துக் கட்டும் இல்லம் இருந்தமை பற்றி,

சிற்றில் நற்றூண் பற்றி (புறநானூறு.86:1)

கவை துற்ற நாற்காற் பந்தர்ச் சிறும னை வாழ்க்கை(புறநானூறு.29:19-20)

(கவைதுற்ற – பிரிவு தோன்ற)

எனவரும் செய்யுட் பகுதியாலும், புல்லாலும் வரகு வைக்கோலாலும் தென்னங்கீற்றாலும் வீட்டின் கூரை வேய்ந்த பாங்கினைப்,

புல்வேய் குரம்பைக் குடிதொறும் பகர்ந்து (புறநானூறு.120:13)

படலைப் பந்தரப்; புல்வேய் குரம்பை (அகநானூறு.87:3)

(குரம்பை – சிறுகுடில்)

பருவ வானத்துப் பாமழை கடுப்பக்

கருவை வேய்ந்த கவின்குடிச் சீறூர்

(பெரும்பாணாற்றுப்படை.152:153)

பா – பரவிய

பெரிய : கருவை – வரகு வைக்கோல்

சீறூர் - சிறிய ஊர்

எனவரும் செய்யுட் பகுதியாலும் அறிந்து கொள்ளலாம். மிகப் பண்டைய காலத்திலேயே ஓவியம் போன்ற மனைகள் கட்டடக் கலை நேர்த்தியுடன் கட்டப்பட்டிருந்தன.

ஓவத்தன்ன இடனுடை வரைப்பின் (நற்றிணை.182:2)

ஓவத்தன்ன வினைபுனை நல்இல் (அகநானூறு.98:11)

(ஓவம் - ஓவியம்)

எனவரும் செய்யுட் பகுதிகளால் தெரிந்து கொள்ளலாம். பெருமனைகள் கட்டிய காலத்தில், மக்கள் தம் வளத்துக்கும் வசதிக்கும் ஏற்ப வீட்டின் பல பக்கங்களிலும் படிகளுடன் கூடிய திண்ணைகளைக் கட்டி வாழ்ந்துள்ளனர்.

மாடம், மண்டபம் முதலிய உயர்தரமான கட்டங்களில் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. மாடத்துச் சித்திரம் எழிலூட்டும் என்பதைப் பிற்காலத்து பவணந்தி முனிவர் தம் நன்னூலில், மாடத்துச் சித்திரம்(55) எனக் கூறிக் காட்டியதை நினைவல் கொள்ளலாம்.

அழகிய அரண்மனை மாடத்தில் தீட்டப்பெற்ற வேங்கைப் புலியின் ஓவியத்தைக் கண்டதும் கரிய பெண்யானை நடுக்க முறுகிறதாம்! இளநங்கையரும் கண்டு அச்சமுற்று நடுங்கின்றனராம்! இதனைப் பரிபாடலில்,

எழில் மாடத்துக்

கைபுனை கிளர்வேங்கை காணிய வெருவுற்று மைபுரை

மடப்பிடி மடநல்லார் விதிர்ப்புற (பரிபாடல்.10:45-47)

கைபுனை – கையால் எழுதப்பெற்ற

வெருவு – அச்சம்

விதிர்ப்பு – நடுக்கம்

எனவரும் பாடற்பகுதியால் அறியலாம்.

**குறிஞ்சிநிலக் குடியிருப்பு:**

மனிதனுக்கு அடிப்படைத் தேவைகள் மூன்று. அவை உணவு, உறையுள்(தங்கும் இடம்), உடை. பறவைகள் கூடுகட்டி வாழ்வதையும், விலங்குகள் தாம் தங்குவதற்கு ஏற்றவகையில் குகை முதலியவற்றை நாடி வாழ்வதையும் பார்த்த மனிதன் தானும் தங்குவதற்கு உரிய இடம் குறித்து எண்ணத் தொடங்கினான். அதன் விளைவே அவன் தங்குவதற்கு உரிய இடம் உருப்பெற்றது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் ஐந்திணைப் பகுதிகளிலும் மக்கள் எவ்வாறு தம் குடியிருப்புகளை அமைத்துக் கொண்டார்கள் என்பதை காண்போம்.

மலையும் மலை சார்ந்த நிலப்பகுதியும் குறிஞ்சித் திணையாகும். குறிஞ்சி வாழ் மக்கள் விலங்குகளை வேட்டையாடி வாழ்ந்தவர்கள். தொடக்கக் காலத்தில் குகைவாழ் மக்களாக இருந்தவர்கள். தினை, வரகு முதலிய பயிர்களைப் பயிரிட்ட பொழுது தினைப்புனக் காவலுக்குப் பரண் (நான்கு குச்சிகளைக் கொண்டு உயரமாகக் கட்டப்படும் இடம்) கட்டுவது போலத் தம் குடிசைகளையும் பரண் அமைப்பில் கட்டிக் கொண்டனர். அடுத்தகட்ட வளர்ச்சியாக மலைப்பாங்கான பகுதிகளில் கூம்புடன் கூடிய வட்டத் தரையமைப்பில் குடிசை கட்டி வாழலாயினர். தாம் வாழும் குடிசைக்காகப் பாறைக் கற்களையும் மூங்கில் கம்புகளையும், தினைத்தாள் - வரகுத்தாள்களையும் கூரைவேயப் பயன்படுத்திக் கொண்டனர்.

**தோற்றம்:**

குடிசைகள் புதர்போன்ற தோற்றத்தில் இருந்ததை ‘புதல்போல் குரம்பை’ என்று அகநானூறு(315) கூறுகிறது.

குறிஞ்சி நிலக்குடியிருப்பில் முன்றில்:

குறிஞ்சி நிலக்குடியிருப்பு வடிவமைப்பில் ‘முன்றில்’ அமைப்புகள் திறந்தவெளி இடமாகக் காணப்படுகின்றன. இவ்வமைப்பில் செடி, கொடிகள் வளர்ந்து, படர்ந்து பந்தல் போல் இருப்பதால் உறங்கி ஓய்வெடுக்கக் கூடிய இடமாக இருந்துள்ளது. முன்றில் முன் பல வேங்கை, மல்லிகை போன்ற தாவரங்கள் இடம்பெற்றிருந்த செய்தியாக இக்கட்டமைப்புகள் இயற்கைச் சூழலுடன் அமைந்திருந்ததை கீழ்வரு பாடல் வரிகளுடன் அறியமுடிகிறது.

“முன்றில் முஞ்ஞையடு முசுண்டை பம்பி

பந்தர் வேண்டா பலர் தூங்கு நீழல்” (புறம்.320:1:2)

“சினைதொறும் தூங்கும் பயம்கெழு பலவின்

களையுடைய முன்றில்”( நற்.77:4-6)

“தேம்பிழி நறவின் குறவர் முன்றில்”( அகம்.78:7)

**இறப்பை அமைப்பு:**

தாழ்வாரத்தின் இறங்கிய பகுதி இறப்பை எனப்படும். இவ்வமைப்பு இறை,இறவாணம் என்று சங்ககால இலக்கியங்களில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. குரம்பைகளின் வடிவமைப்பில்

இறப்பையின் தோற்றம் ஒரே மாதிரி இருப்பதை காணமுடிகின்றது. நிலப்பாகுபாட்டிற்கேற்ப அமைந்த குரம்பைகளின் கூரையமைப்புகள் தாழ்வான குறுகிய இறப்பையினை உடையதாக இருந்தன என்று கீழ்க்காணும் பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

"முண்டகம் வேய்ந்த குறியிறைக் குரம்பை"( நற்.207:2)

"குறியிறைக் குரம்பை" (புறம்.129:1)

பல பிரிவுகளாக அமைந்த மாடக்குடியிருப்புகளின் இறவாணம் புறாக்கள் உறங்குவதற்குரிய இடமாக இருந்துள்ளன. தீக்கடைக்கோல் பயன்படுத்தப்படாத காலங்களில் வீட்டின் முன் அமைந்துள்ள கூரையின் அடிப்பகுதியில் செருகி வைக்கப்பட்டிருந்தன என கீழ்வரும் பறநானூற்று பாடல் வரிகளின் மூலம் தெளிவாகிறது.

"இல்இறைச் செரிஇய ஞெலிபோல்" (புறம்.315:4)

பழங்காலத்தில் பயன்பாட்டிற்குரிய சில பொருட்களை செருகி வைக்கின்ற பகுதியாக இறப்பை இருந்துள்ளது. இப்பழக்கம் இன்றும் மரபு தொடர்ச்சியாகக் காணப்படுகிறது.

**திண்ணை அமைப்பு:**

வீட்டின் முன்பகுதியில் மேடை போன்று அமைக்கப்படும் இடத்திற்குத் திண்ணை என்று பெயர். இக்கட்டமைப்பு திண்ணை, தெற்றி,வேதிகை, பீடிகை என்னும் சொற்களால் குறிப்பிடப்படுகின்றது. திண்ணை வீட்டின் முன்பகுதியில் இடம்பெறும் கட்டமைப்பாக உள்ளதால் முற்றத்தின் விpரிவாக்கமாக இதைக் கருதப்படுகிறது. அமர்வதற்கு, உறங்குவதற்கு, ஓய்வெடுப்பதற்கு, விளையாடுவதற்கு என்ற தேவைகளின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட அமைப்பாக இது திகழ்கின்றன. இதை கீழ்வரும் புறநானூற்றுப் பாடல்வரி உறுதிபடுத்துகின்றன.

"தெற்றிப் பாவை திணி மணல் அயரும்"(புறம்.283:1:2)

கல்லால் நிறுத்தப்பட்ட திண்ணைக் கட்டமைப்புச் செய்திகளும், தாவரங்களை வளர்த்த செய்திகளும் சங்ககால குறிப்புகளில் காணப்படுகின்றன.

**தொகுப்புரை:**

சங்க காலத்தில் மக்கள் தாங்கள் வாழ்ந்த நிலங்களுக்கு ஏற்ப தங்களுக்குக் கட்டிக் கொண்ட வீடுகள், இருப்பிடங்கள் காலத்திற்கேற்ப மாறிக்கொண்டே வந்தன. தனிமனிதன் குடியிருப்புகளும் அரசர்களின் குடியிருப்பும் நாட்டுப் பாதுகாப்பிற்கான குடியிருப்பும் அரண்களும் இருந்தன. நிலத்தை இயற்கை அமைப்பின் அடிப்படையில் பகுத்து பெயரிட்டார்கள். இயற்கையோடு இயைந்த வாழ்வை உடைய மக்களின் நகர வாழ்க்கை நிலைக்கு உயர்ந்த போது செயற்கை வாழிடங்களை உருவாக்கத் தொடங்கினார். வீடு என்பது மனை, இல் என அழைக்கப்பட்டன. அழகுடையதாகவும் காற்றோட்டம் உடையதாகவும் பல்வேறு வசதிகளுடன் விளங்குகின்ற காலநிலைக்கேற்ற முறைமையில் வீடுகள், குடியிருப்புகள் கட்டுமான முறையில் இருந்தன என்பதை அறியமுடிகின்றது.

**துணைநூற்பட்டியல்:**

1.சாமிநாதையர். உ.வே. ப.ஆ.மணிமேகலை உ.வே.சா நூல்நிலையம். 1931

2. சாமிநாதையர். உ.வே. ப.ஆ.பத்துப்பாட்டு உ.வே.சா நூல்நிலையம், சென்னை 1950

3. சாமிநாதையர். உ.வே. ப.ஆ.சிலப்பதிகாரம் உ.வே.சா நூல்நிலையம், சென்னை 2008

4. சாமிநாதையர். உ.வே. ப.ஆ.குறுந்தொகை உ.வே.சா நூல்நிலையம், சென்னை 2009

5.சுப்பிரமணியன் ச.வே. ப.ஆ.பத்துப்பாட்டு மூலம், மணிவாசகர் புத்தகநிலையம், 2006

6.துரைசாமிபிள்ளை,ஔவை.சு.உ.ஆபுறநானூறு 1–200 கழகவெளியீடு, சென்னை,1947.

7.துரைசாமிபிள்ளை, ஔவை. சு.உ.ஆபுறநானூறு 201–400 கழக வெளியீடு, சென்னை,1951

8.பலராமன்.க, பழந்தமிழில் அறிவியல், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை 2009

9.மணவழகன் ஆ, பழந்தமிழர் தொழில்நுட்பம், அய்யனார் பதிப்பகம் -2010

10.மாத்தளைசோமு, வியக்கவைக்கும் தமிழர் அறிவியல், உலகம், திருச்சி,2005

11.வேங்கடசாமி,மயிலை.சீனி.பழங்காலத் தமிழர் வாணிகம். 2011